**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1002/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முத்துகிருஷ்ணன் | த–பெ | கருப்பையா |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 47/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | தலைமை காவலர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.07.2025**

**எதிரி ஆஜர்.**

---

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து தலைமை காவலராக காரைக்குடி போக்குவரத்து காவல் பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2018 ம் வருடம் அழகப்பாபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது 08.12.2018 அன்று மாலை 18.00 மணியளவில் Hello போலீசில் பணியில் இருந்தேன். இரயில் நிலையம் முதல் வள்ளல் அழகப்பர் சிலை வரை ரோந்து பணியில் இருந்தபோது சிக்கிரி கேந்திரா வித்தியா பள்ளி மெயின் கேட்டில் மேற்கு புறம் சென்றபோது எனக்கு முன்புறம் தென்திசையில் இருந்து வடக்கு நோக்கி சென்ற பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த அழகப்பன் த.பெ, அண்ணாமலை, கோட்டையூர் என்பவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் டி.என்63 ஏவி 1086 Hero Pleasure ஓட்டிச்சென்ற வாகனத்தின் மீது அதே வடக்கு திசையில்இருந்து தெற்கு நோக்கி வந்த டாடா ஏசி வாகனம் டிஎன்65 Q7688 வாகனம் மோதிய போது அதை நான் நேரில் பார்த்தேன். எனது வாகனத்தை நிறுத்திவிட்டு ஓடிச்சென்று பார்த்தபோது இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த அழகப்பன் என்பவருக்கு தலை, முகம் மற்றும் முழங்காலில் காயம் ஏற்பட்டு நடுரோட்டில் விழுந்துவிட்டார். அருகே சென்று பார்த்தபோது மயங்கி கிடந்தார். பிறகு 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அழகப்பனை சேர்த்தேன். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர் வரும் வழியில் இறந்து விட்டார் என்று சொன்னார்கள். நான் சம்பவம் நடந்த போது சம்பவ இடத்தில் கிடைத்த அழகப்பன் என்பவரின் செல்போனை எடுத்து அதில் லட்சுமணன் என்பவருக்கு தகவல் சொல்லி விசாரிக்கும்போது லட்சுமணன் என்பவர் அருணாசலம் என்பவரின் சகோதரர் என்றும் கோட்டையூரை சார்ந்தவர் என்றும் சொன்னார். மேற்படி அவர் செல்போனில் அருணாசலம் என்ற நபருக்கு தொடர்பு கொண்டு நடந்த விபரங்களை சொன்னேன். அருணாசலம் சுமார் 19.00 மணிக்கு காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு வந்து நடந்த விபரங்களை என்னிடம் கேட்டு தெரிந்து கொண்டார்.

மேலும் இவர் மீது வாகனத்தை மோதி விபத்தை ஏற்படுத்தியவர் கோட்டையூர் சுண்ணாம்புகாரத்தெரு செந்தமிழ் நகர் கோட்டையூர் ராமர் மகன் பாண்டி என்ற விபரத்தை தெரிந்து கொண்டேன். நடந்த விபரங்களை காவல் ஆய்வாளரிடம் என்னிடம் கேட்க மேற்படி விபரங்களை சொன்னேன். ஆஜர் எதிரி தான் மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார்.

**குறுக்கு விசாரணை**

வள்ளல் அழகப்பர் சிலைக்கும் இரயில்வே நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 400 மீ இருக்கும். சம்பவம் நடந்த சமயத்தில் யார் இருந்தார்கள் என்றால் சிக்கரி பள்ளி காவலர் இருந்தார். சிக்கரி பள்ளி வாசலில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். இருவழிச்சாலையில் சாலை பராமரிப்பு பணி காரணமாக ஒருவழிச்சாலையாக மாற்றியிருந்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் வேகத்தடை அருகே என்றால் சரிதான். இரயில்வே நிலையத்தில் இருந்து நான் வள்ளல் அழகப்பர் சிலை தெற்கில் இருந்து வடக்கு நோக்கி செல்லவேண்டும் என்றால் சரிதான். நடந்த சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபர் எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால் அவர்மீது அக்கறை கொண்டு நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் விபத்து நேரிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.31 10:23:40 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி